**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.210/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 7 |
| Name : | மருத்துவர். தணிகாசலம் |
| Father's/Husband Name: | திருப்பதி |
| Village : | மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை, தஞ்சாவூர் |
| Taluk : | தஞ்சாவூர் |
| Age : | 39 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2 மற்றும் 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக படித்து வருகிறேன். நான் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்த போது கடந்த 22.03.2021ம் தேதி மாலை 7.45 மணியளவில் ஜெயப்ரியா க.பெ சக்திவேல் என்பவரை அவரது தாயார் ராஜாகுமாரி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

அவரை விசாரணை செய்த போது 22.03.21ம் தேதி மாலை 5 மணியளவில் அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர்கள் தன்னை கால்களாலும் மற்றும் மரக்கட்டையால் தாக்கியதாக கூறினார்.

நான் அவரை பரிசோதனை செய்த போது அவரின் நெஞ்சுப்பகுதியில் வலி இருந்ததாக சொன்னார். நான் அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன்.

சிகிச்சை நிலுவையில் இருக்கும்போது எங்களிடம் சொல்லாமல் அவர் மருத்துவமனையிலிருந்து வெளியே சென்றுவிட்டார். மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் **அ.சா.ஆ2 மற்றும் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்டவரை பரிசோதித்து இறுதி முடிவு வழங்குவதற்குள் அவர் மருத்துவமனையிலிருந்து எங்களிடம் சொல்லாமல் வெளியேறிவிட்டார் என்றால் சரிதான். ஒருவரை பரிசோதித்து சிகிச்சை அளித்த பிறகு தான் காயச்சான்றிதழ் வழங்க முடியும் என்றால் சரிதான். என்னிடம் சிகிச்சைக்கு வந்தவர் பாதியிலேயே சென்றுவிட்டதால் அவரின் காயத்தின் தன்மை குறித்து என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.